**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி**

**OS. No. 386/2023**

**30.06.2025**

**P.W.1- அர்ச்சுணன்**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

பிராதில் 27.09.2017ல் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 2வது கையெழுத்து செய்தவர் சொக்கத்தேவன்பட்டியை சேர்ந்தவர் என்றால் சரிதான். விஸ்வநாதன், 2ம் பிரதிவாதி பாண்டியம்மாளுக்கு ரூ.90,000 கடன் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி எனக்கு புரோநோட் எழுதிக்கொடுக்கவில்லை. நான் 3ம் நபரிடம் கடன் வாங்கி கொடுத்த விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பு, நிருபண வாக்குமூலம் மற்றும் பிராதில் கூறவில்லை என்றால் சரிதான். 09.12.2024ம் தேதியில் நிருபண வாக்குமூலத்தில் கையெழுத்து செய்துள்ளேன். 08.01.2024ம் தேதி பிரதிவாதிகள் பதிலறிவிப்பு அனுப்பினார்கள் என்றால் சரிதான். 09.01.2024ல் எனது வழக்கறிஞர் அதை பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். 23.01.2024ல் பிரதிவாதிகள் தரப்பில் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆகையால் என்னுடைய நிருபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு சங்கதிகள் தவறானது என்றால் சரியல்ல.

ம.வி.இல்லை.

P S RUSKIN RAJ

Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.06.30 17:23:05 +0530

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பம் இடப்பட்டது.